# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP. No. 76/2020

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.முத்துக்குமார்** **Rw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of September 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 3 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 2 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) TN-72-BH-3664 என்ற 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான லாரிக்கு 28.08.2019 முதல் 27.08.2020 வரை எங்கள் நிறுவனம் வழங்கியுள்ள காப்பீட்டு சான்றிதழின் உண்மை நகல் நிபந்தனைகளுடன் **எ.ம.சா.ஆ.2** ஆகும். 2) 27.02.2021ம் தேதியில் 3 ம் எதிர்மனுதாரரின் களப்பணியாளர் அறிக்கையின் அலுவலக நகல் **எ.ம.சா.ஆ. 3**

ஆகும். 3ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். களப்பணியாளர் அறிக்கையை தயார் செய்த நபர் எங்கள் நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்டவர் என்றால் சரிதான். களப்பணியாளரும் விபத்தை நேரில் பார்த்த நபர் கிடையாது என்றால் சரிதான். களப்பணியாளர் எங்கள் நிறுவனத்தை சேர்ந்தவர் என்பதால் அவர் எங்கள் நிறுவனத்திற்கு சாதகமாக அறிக்கை தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. முதல்தகவல் அறிக்கையில் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே, எங்கள் காப்பீட்டு நிறுவனமும் 1, 2 எதிர்மனுதாரர்களும் சேர்ந்து மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல, வாகனத்தை ஓட்டிசென்ற மாணிக்கராஜ் என்பவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினாலும், லாரியின் பின்னால் சென்று மோதிய காரணத்தினாலும் நாங்கள் இழப்பீடு கொடுக்கத் தேவையில்லை. எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட லாரி ஓட்டுநரின் கவனக்குறைவாலும், உரிய சமிக்ஞை செய்யாமல் வாகனத்தை திடீரென ரோட்டின் இடது பக்கம் திருப்பிய காரணத்தினாலும்தான் விபத்து ஏற்பட்டது என்பதால் நாங்கள் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த மாணிக்கராஜ் மீது எந்த தவறும் இல்லாத காரணத்தினால் அவர் பயணம் செய்த வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை ஒரு தரப்பினராக இந்த மனுவில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**(Cross adopted by R1, R2)**

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi